மூட பக்தி களைந்து கொள்கை வெற்றிக்கு உழைப்போம்

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (8—12—49) வெளியூர் (9—12—49) [இதழ் 111

தலைவரின் தவறான போக்கு கண்டும், தன்மதிப்புடையோர் தண்டனிட முடியுமா?

கண்ணிலுஞ் சிறந்த கொள்கை போனபின், காப்பேன் என்ற தலைமை நமக்கேன்?

மனித உரிமைக்குப் பாடுபட வாரீர்!

— இலங்கை சமஷ்டித் தலைவர்கள்

"சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, மனித உரிமைச் சாசனம் ஆகிய மகத்தான வாழ்வின் மனிதர்க்கு வேண்டிய ஒப்பற்ற லட்சியச் சுடரை அடைவதற்கு, வஞ்சகரின் தூற்றல்கள் — சதிகாரர்களின் தகிடுதத்தம் ஆகியவற்றை எதிர்த்துச் செல்லும் நம் ஒவ்வொருவருக்கும் கொள்கையே பெரிதாயிருக்கவேண்டும். எல்லாரும் இன்புற்றிருக்க வழி தேடித் தரும் பண்பு நிறைந்தபாதையையடைய தளரா ஊக்கம் தன்னம்பிக்கை ஆகிய மகா சக்தி வாய்ந்த ஆயுதங்களைக்கொண்டு போராடும் நாம தலைவருக்காக, அவர் சொல்லும் வழி தப்பான வழியென்று கண்டும் தண்டனிட்டு மனம் ஒப்பியே பேசுவது புத்திசாலித் தனமல்ல. ஆலகால விஷமென்று கண்டும, தலைவர் அருந்தச் சொன்னால் நாம் அருந்துவதா? அல்லது அப்பாலே விட்டெறிவதா? இதில் எதை அறிவுலகம் ஏற்கும்?

தலைவர் சொல்வது தவறானபாதை என்று கண்டால்அவரைத் தள்ளிவிட்டு தொடர்ந்து நம் போராட்டத்தை நடத்த நாம் ஒவ்வொருவரும் தயாராயிருக்கவேண்டும். அது மட்டுமல்ல அபபோராட்டத்தில பங்கெடுக்கும் ஒவ்வொருவரும் அக்கொள்கையை நிறைவேற்ற உழைக்கும் தலைவர்களாயிருக்க வேண்டும்.

தலைவர் சொல்லே வேத வாக்கென்ற மூட பக்தியை மூளையில் ஏற்றுது மதிப்பிட முடியாத நம் கொள்கையின வெற்றிக்காக இறுதிவரை ஒவ்வொருவரும் போராடுவோமென திடசங்கற்பம் செய்வோம்."

இலங்கையில் தமிழர் வாழ் பகுதிக்கெனத் தனி சுய நிர்ணய உரிமை நல்கும் ஆட்சியமைப்பு (இலங்கை யரசுக் குட்பட்டே) ஏற்படல் வேண்டுமென்ற கொள்கையோடு போராடிவரும் இலங்கைத் தமிழர், காங்கிரசின் சமஷ்டி வாதிகள் கூட்டமொன்று கொழும்பு—கொடாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி மண்டபத்தில் டிசம்பர் 3-ந் தேதி, சனியன்று மாலை நடைபெற்றது. கூட்டத்துக்கு செனட்டர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமைதாங்கினார். தலைமைச் சொற்பொழிவின் சுருக்கத்தையே— 'சுதந்திரன்' (இலங்கை தினசரி) தந்துள்ளபடி மேலே — கொடுத்துள்ளோம்.

இலங்கைக்கு சுதந்திரம் வந்தும், அங்குறையும் தமிழர்களுக்கு அது எட்டாத தீங்கனியாகவே இருந்து வருகிறது. தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பதற்கான நல்வினைவுகளென வற்றையும் நாங்கவில்லை, வந்த சுதந்தரம் இதனை எடுத்துக்காட்டிதோம் எஸ். ஜே. வி. செல்வநாயகம் கே ஆ. எம். பி. பேசுகையில குறிப்பிட்டதாவது:

"இலங்கைக்கு சுதந்தரம் என்பது கிடைத்த பினனரும், சிங்களவர்களைப் போலத் தமிழர்கள் தலைநிமிர்ந்து தாங்கள் சுதந்தரம் அடைந்துள்ளார்களென்பதை உணருகிறார்களில்லை. ஏனெனில், தறபோதைய அரசியலமைபபிலே தமிழருக்கு இடமில்லாமலும் அவாகள் பேசசுகளுக்கு செவிசாய்க்கப் படாமலும் இருக்கிறது.

"ஒரு பகுதியினர் ஒரு தேசமாவதறகு மூன்று காரியங்கள். அத்தியாவசியமானவை. இவைகள மொழி கலாசாரம், பிரதேசம் ஆகியவையே. தமிழ் பேசு மக்களுக்கு மேறகுறிப் பிட்ட மூன்று அம்சங்களும் இருககின்றன. தமிழ் பேசும் மக்கள் தலைவர்களையே பின்பற்றி சுதந்தரத்துடன், பண்பாடுகளைப் பின்பற்றுததே அவர்களில் காணபடும் ஓர்பெருங் குறையாகும்.

"எமக்கு எங்களது கொள்கையே பெரிதன்றி, தலைவர் பெரிதல்ல. எங்களுடைய சுயமரியாதையும் சுதந்திரமும பாதுகாககப் படுவதறகாகவே நாங்கள் சமஷ்டி வேண்டுகிறோம்."

கூட்ட இறுதியில் தம்மிடம் கேட்கபபெற்ற கேள்விகளைத்துக்கும் டாக்டர் நாகநாதன தக்க முறையில பதிலளித்தார்.

இந்துசட்ட தொகுப்பு மசோதா பற்றிய நேருவின் 'சப்பைக்கட்டு' கொள்கை

மசோதா ஆதரவாளர் மாநாட்டுக் குழுவின் ஆட்சேபம்

இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை ஆதரிக்க, பம்பாயில் மாகாண மாநாடொன்றை நடத்துவதற்காக நிறுவப்பெற்ற வரவேற்புக் குழு, பண்டித நேரு அண்மையில் மத்திய சட்டசபையில் 'மசோதா விஷயத்தில் இரண்டிலொன்று பார்த்து விட சர்க்கார் முடிவு செய்து விட்டது' என்று அறிவித்ததைப் பாராட்டியுள்ளது.

பிரதம மந்திரியின் இத்தகைய உறுதிமொழிக்கு நன்றியுஞ் செலுத்தியது மேற்படி குழு.

"கருத்து வேறுபாடு கொண்டவரையில் திருப்திபடுத்தும் வகையில் திருத்தங்கள் சில செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்த கமிட்டியொன்று நிறுவலாம்" என்பதாக நேரு அன்று குறிப்பிட்டமைக்கு மட்டும் வருத்தந் தெரிவித்து, கடந்த பத்தாண்டு காலமாகவே பல கமிட்டிகள் தீர ஆலோசித்து முடிவு செய்யப்பெற்றவைதான் இம்மசோதாவில் கண்டுள்ள விஷயங்களெனக் குறிப்பிட்டு, எனவே திருத்தங்களெவையும் செய்யவேண்டிய அவசியமேயில்லை யென வரையறுத்துத் தீர்மானமொன்று நிறைவேறியது. மசோதா கூடியவிரைவில நிறைவேற்றம்பெறுமென நம்புவதாகவும் மேற்படி மாநாட்டின் வரவேற்புக் குழு தெரிவித்தது. மாநாடு பெபரவரி 26-ல் பம்பாயில், டாக்டர் எம். ஆர். ஜெயக்கர் தலைமையுல் நடைபெறுமெனத் தெரிகிறது.

சீனவியாபாரிகள் பிழியப்படுவர்!

ஹாங்காங், டிச. 7—

டிசம்பர் 17-க்குள் 10,000,000 ஹாங்காங் டாலர்களைக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று சீன கம்யூனிஸ்டுகள் காண்டன் வியாபாரிகளை வற்புறுத்தி வருவதாக, காண்டன்பத்திரிகைகள் செய்தியை வெளியிட்டிருக்கின்றன.

ஐதராபாத் காங்கிரஸ் நாற்றம்!

மேலிடத்துக்கு ராமாநந்தர் பறக்கிறார்

ஐதராபாத் சமஸ்தான காங்கிரசாரிடையே தலைவர் தேர்தல் பற்றி ஏற்பட்ட தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள ஐதராபாதில் நடத்தி வந்தப் பேச்சுவார்த்தை படுமோசமாய் முறிந்துவிட்டதாகத் தெரியவருகிறது. சமஸ்தான காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு ஐதராபாருக்கும் பொதுவான ஒரு அபேட்சகரை நிறுத்துவதுபற்றிப் பேச்சுவார்த்தை நடந்ததாம். இத்தகராறைத் தீர்க்க, காங்கிரஸ் மேலிடத்தின் உதவியைப் பெறுவது நாடுவதென்ற முடிவில், சுவாமி ராமானந்த தீர்த்தரும், பி. ராமகிருஷ்ணராவும் டெல்லிக்குப் புறப்படுகிறார்களாம்.

இந்தியப் புகையிலை

லண்டன், டிச. 7—

இவ்வாண்டு பிரிட்டனில் இந்தியப் புகையிலை ஏராளமாக உபயோகிக்கப்படுகிறதுபொதுவாகவே பிரிட்டனில் சிகரெட் பிடிக்கும் வழக்கம் மிகவும் அதிகரித்திருக்கிறது என்று புள்ளி விவரங்களிலிருந்து தெரிகின்றன. முன்பு வாங்கப்பட்ட இந்தியப் புகையிலையை விட இரட்டிப்பு மடங்கை பிரிட்டன இப்பொழுது வாங்கி வருகிறது வர்த்தகபோர்டு, புள்ளி விவரங்களிலிருந்து சென்ற ஆண்டு முதல் 10 மாதங்களில் 14750,00 பவுண்ட் இந்தியப் புகையிலையை பிரிட்டன் வரவழைத்ததென்றும் இவ்வாண்டு அதே பத்துமாதத்தில் 32000000 பவுண்ட் இந்தியப்புகையிலை உபயோகிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிய வருகிறது.

—ரூனோப்

உயர்தர சக்திவாய்ந்த அணுக்குண்டு

லண்டன், டிச. 7—

ஹிரோஷிமா, நாகஸகியில் உபயோகித்த அணுக்குண்டுகளைவிட, இன்னும்பனமடங்குசக்தி வாய்ந்த அணுக்குண்டுகள் மூன்றை யுனைடெட் ஸ்டேட்ஸ் தயாரித்து பரீட்சித்தும் பார்த்திருக்கிறது என்று, 'ஸ்டார்' பத்திரிகை தகவல் தருகிறது.

—ரூனோப்

இருபது லட்சம் இத்தாலிய உழவர்களின் உரிமைப் போராட்டம்!

:0:

உள்நாட்டுப் போருக்கான அறிகுறிகள்

ரோம், டிச. 7—

இதாலியில் விவசாயிகளின் கிளர்ச்சி நாடெங்கும் பரவிவிட்டது எனறே சொல்லலாம் என்ற அளவுக்கு வந்துவிட்டது.

சர்க்கார் எவ்வளவோ எச்சரிக்கை செய்திருந்தும், இயக்கம் அடங்குவதாகத் தெரியவில்லை. இந்த இயக்கத்திற்குக் கம்யூனிஸ்டுகளின் பலமான ஆதரவு கிடைத்து வருகிறதென்று ருசுககள் கிடைத்திருக்கின்றனவாம்.

ரோமுக்கு வடக்கில், லாஷியம் மாகாணத்தல் கம்யூனிஸ்டுகள் கொடியின கீழ் 20 லட்சம் விவசாயிகள் இக்கிளர்ச்சியை ஆரம்பித்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஸ்பெயினில் உள்நாட்டுப் போர் ஏற்படுமுன் என்ன நிலைமை இருந்ததோ, அதே நிலைமைதான் இப்பொழுது இத்தாலியில் இருந்து வருகிறது.

ருமேனியா பல்கேரியா பாதுகாப்பு

ஸ்டாக்ஹோம், டிச. 7—

ருமேனியா பல்கேரியாவின் பாதுகாப்பு பொறுப்பை உயர்தர ரஷிய அதிகாரிகள் நேரிடையாக ஏற்பார், என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

போலந்தில் ஸ்டாலின்ராட் வீரர் கோகோஸோவஸ்கியை ஏற்கனவே நியமித்திருக்கிறது,

ருமேனியாவின் புதுபாதுகாப்புத் தலைவராக, மார்ஷல் மாலினவ்ஸ்கி நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 8—12—49 வியாழக்கிழமை

ஆவன செய்க!

சித்த-ஆயுர்வேத - யூனனி ஆகியவை, இந்தியத்துணைக் கண்ட வைத்திய முறைகளில் முக்கிய மூன்ருகும். இவற்றில், தென்னுட்டில் இயற்கையோடு இயைந்து வளர்ந்து வந்ததும், தொன்று தொட்டுத் தென்னுட்டு மக்களால் போற்றி வளர்க்கப்பட்டு வருவதும், தென்னுட்டின் சூழ்நிலைக்கேற்ப அமைந்ததும் சித்த வைத்தியம் ஒன்றேயாகும்.

இந்த வைத்திய முறைகளிடத்து அரசாங்கம் இதுகாறும் அவநம்பிக்கையும், அலட்சியமும் காட்டி வந்ததாலும், ஆதரவு காட்ட மறுத்து வந்ததாலும் இம்முறைகளிடத்து மக்களுக்கு ஏற்பட்டிருந்த விருப்பம், நாளடைவில் குறைந்து வரலாயிற்று. கீழை நாட்டு வைத்திய முறைகளிலுள்ள குறைபாடுகளை, மேலை நாட்டு வைத்திய முறையைக் கொண்டுநிரப்பிக்கொண்டால், இந்நாட்டிற்கேற்றபடி எளிதில்-மலிவில்-சிறந்த வைத்தியத்தைக் கைக்கொள்ளலாம் என்ற உணர்வு, பலரிடம் இருந்து வந்தது. அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே, சோப்ரா கமிட்டி, அண்மையில் அறிக்கையொன்று தயாரித்ததைப்பலரும் அறிந்திருக்கக்கூடும்.

சோப்ரா கமிட்டி தயாரித்த அறிக்கை ஆயுர்வேத-யூனனி முறைகளுக்கு ஆக்கம் அளிப்பதாகவும், சித்த வைத்திய முறைக்குத் துரோகம் இழைப்பதாகவுமே இருந்ததைச், சித்த வைத்திய அறிஞர்கள் ஆங்காங்கு கண்டனக் குரல்கள் எழுப்பிச் சுட்டிக்காட்டினர். அவை ஆட்சியாளர் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை!

இந்திய சர்க்கார் ஆயுர்வேத-யூனனி முறைகளுக்கு மட்டும், குறிப்பாக ஆயுர்வேதத்திற்கு மட்டும் ஆக்கந்தரும் திட்டம் ஒன்றை இப்பொழுது கொண்டு வந்துள்ளார்கள். **சோப்ரா கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ள முறையில் ஆயுர்வேத யூனனி வைத்திய முறைகளில் ஆராய்ச்சி நல் வளர்ச்சிக்கான விவரமான திட்ட மொன்றைத் தயாரிப்பதற்காக, 9 டாக்டர்கள் கொண்ட குழு ஒன்றை இந்திய சர்க்கார் நியமித்திருப்பதாக இந்திய சுகாதாரஇலாகா அறிவிக்கிறது அந்தக் குழுவுக்கு, டாக்டர் ஜி ஜி பண்டிட் தலைவராக இருப்பாராம்.**

ஆராய்ச்சிக்கு - நல்வளர்ச்சிக்கு சித்தவைத்தியம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை - ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது மட்டுமல்ல, வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? என்ன காரணம்? என்ன சூட்சமம்? ஆயுர்வேதம் ஆரிய முறை-வடவர்க்குகந்தமுறை! சித்த வைத்தியம் தமிழ் முறை-தமிழர்க்கு ஏற்றமுறை! ஆரிய இறுமாப்பு கொண்டவர்களால் அரசாங்கம் ஆட்டிப் படைக்கப்படுகிறதால், ஆரிய முறை தழுவப் படுகிறது-தமிழ் முறை புறக்கணிக்கப்படுகிறது! சித்த வைத்தியத்தை ஒரு பொருட்டாக சோப்ரா கமிட்டியோ, அரசாங்கமோ மதிக்கவில்லையே! ஏன்? வேண்டுமென்றே புறக்கணிக்கும் செயலைத்தவிர, என்னவாக இருக்க முடியும்?

நாடு'-என்ருல் 'ஆரிய பூமி'; 'பெயர்'-என்ருல் 'ஆரியப் பெயர்'; 'மொழி' - என்ருல் 'ஆரிய சமஸ்கிருதம்'; 'கலாசாரம்'-என்ருல் 'ஆரிய கலாசாரம்'; 'இலக்கியம்' - என்ருல் 'ஆரிய வேதம்'; 'சாஸ்திரம்'-என்ருல் 'ஆரிய இந்து சாஸ்திரம்'; 'சங்கீதம்' - என்ருல் 'ஆரிய சங்கீதம்'; 'நாட்டியம்'-என்ருல் 'ஆரியக்கூத்து'; **'வைத்தியம்' — என்ருல் 'ஆயுர்வேதம்'!** என்ன கொடுமை! தீந்தமிழ் நாட்டில் - திராவிடத்தில் ஆரியம் எந்தெந்த அளவுக்குக் கொடுமை புரிய ஆரம்பித்திருக்கிறது! இப்பொழுது வைத்திய முறையிலும் ஆணை செலுத்த ஆரம்பித்திருக்கிறது! தென்னுடு பலவகைகளிலும் புறக்கணிக்கப்படுவதுபோல் வைத்திய முறையிலும் புறக்கணிக்கப் படுகிறது! இந்தத் தீங்கை உணர்வோர் திராவிடத்தில் - தேன் தமிழ் நாட்டில் எத்துணைப் பேர் உளர்?

தென்னுட்டுக்குஏற்றவைத்தியம் சித்த வைத்தியமேயாகும். சித்த வைத்தியந்தான் தென்னுட்டு தட்பவெட்ப நிலையையும், மக்களின் உடற் கூறுபாடுகளையும் நன்கு அறிந்ததாகும். சித்த வைத்தியந்தான் தென்னுட்டில் கிடைக்கக் கூடிய மருந்து வகைகளின் தன்மைகளைத் தீர ஆராய்ந்து, எளிதில்-விலைமலிவில் பெறக் கூடிய வாய்ப்பை அறிந்து வைத்திருப்பதாகும். சித்த வைத்தியந்தான், தென்னுட்டு மக்களின் உணவுப் பொருள்களின் தன்மை உணர்ந்து நோய் தீர்க்கும் பெற்றியுடையது. ஆகவே மேனுட்டு வைத்திய முறையும்-சித்த வைத்திய முறையும் சேர்ந்தவொரு வைத்திய முறை கையாளப்படுமேயானல், அதுவே போதுமானது-சிறந்ததும் ஆகும். ஆயுர்வேதம் தென்னுட்டிற்கு அவசியமில்லை ஆயுர்வேதம் அவசியத்தையொட்டி அல்ல, அது ஆரிய முறையைச்சேர்ந்தது. ஆகவே, அதற்குப் பெருமையளிக்க வேண்டும் என்ற ஒரே காரணமல்லாமல், வேறு அறிவுக்குப் பொருத்தமான காரணம், எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சித்த வைத்தியத்தை அடியோடு புறக்கணித்து ஒழித்து விடும் முயற்சியே! இப்பொழுது இந்திய சர்க்கார் போட்டிருக்கும் திட்டமாகும்.

வைதியக்கல்லூரி பட்டப்படிப்பில் பட்டம் பெறுவதற்கு முன்போ, அல்லது பின்போ, ஆயுர்வேத யூனனி முறைகளில் தனிப்பயிற்சி அளிக்க இயலுமா, என்பதைப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குழு ஆராயுமாம். சித்தவைத்தியப் பயிற்சியும் ஏன் அளிக்கப்படக்கூடாது? என் சித்தவைத்தியம் புறக்கணிக்கப்பட வேண்டும்? ஆயுர்வேத முறை பாடத்திட்டத்தில் சேரும்போது, ஏன் சித்தவைத்திய முறை சேரக்கூடாது? வேண்டுமென்றே சித்த வைத்தியம் அலட்சியப் படுத்தப்படுகிறது! அவ்வளவுதான்!

தென்னுட்டைப் பொறுத்த வரையிலாவது சித்தவைத்தியம்-மேனுட்டு வைத்தியத்தோடு, ஏற்ற அளவு ஒன்றி நின்று நாட்டுக்குப் பயன்படச் செய்ய வேண்டியது, திராவிடர்களின்-தமிழர்களின் நீங்காக் கடமையாகும். கீழை நாட்டு வைத்திய முறைகளில் மிக மிகச் சிறந்ததாகப் போற்றப் படும் சித்தவைத்தியம், புறக்கணிக்கப்படுவதை தமிழகத்து மக்கள் பார்த்துக்கொண்டிருக்கப் போகிருர்களா? சித்த வைத்திய அறிஞர்கள் கவலையற்றிருக்கப் போகிருர்களா? இந்தச்சமயத்தில்ஏமாந்திருந்து விடாமல், நாட்டுக்குரிய வைத்தியக்கலையைக் காப்பாற்றும் பணியில், சித்தவைத்தியர்கள் இறங்க வேண்டும். **ஆவன செய்க!** இன்றே செய்க!! உடனே செய்க!!!

செவ்வாய்க்கிரகத்தில் புல்பூண்டுகள்?

லண்டன், டிச. 7—

எழுபத்தைந்து வயதுள்ள சோவியத் பேராசிரியர் கேவ்ரல் டிகாவ் செவ்வாய்க்கிரகத்தில்புல் பூண்டுகள், செடிகள் மூலிகைகள் உள என்பதைக் கண்டுபிடித்திருப்பதாக, மாஸ்கோ ரேடியோ சமீபத்தில் அறிவித்திருக்கிறது

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இதை நம்ப மறுக்கிறர்கள் செவ்வாய்க் கிரகத்திலுள்ள தட்பவெப்பம், பூமியின் துருவப் பகுதிகளிலுள்ள குளிரைவிட அதிகக் குளிராய் இருக்க வேண்டுமென்றும் ஆகவே அங்கு புல், பூண்டு இருப்பதற்கு நியாயமில்லை என்றும் அப்படியே இருந்தாலும் பூமியிலுள்ள புல் பூண்டுகள் [illegible] கருதுகின்றனர்கள்.

வறண்ட பகுதிகளை வளமாக்கத் திட்டம்

பாரிஸ், டிச. 6-

உலகில் மக்கள் தொகை பெருகி வரும்போது, நிலப்பரப்பில் பெரும்பாலானவை வறண்டு கிடக்க விட்டு வைப்பது சரியல்லவென்றும், அந்த நிலங்களைச் செழிப்பாக்க வழிவகை தேட வேண்டும் என்ற இந்திய விஞ்ஞானியின் யோசனையின் பேரில், யூனஸ்கோவின் ஆதரவில் இவ்விஷயமாக வல்லுநர்கள் கூடி ஆலோசிக்க ஆரம்பித்திருக்கின்றனர் [illegible] அந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இப்பிரச்னையைக் கவனிக்க ஒரு சர்வதேசஸ்தாபனம், அல்லது சர்வதேச கமிஷன் ஒன்று ஏற்படலாம் என்று தெரிகிறது. (ரூளோப்)

முக்கூட்டு வட்டமேஜை மாநாடு

பிரிடோரியா, டிச. 7—

தென்னுப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் இம்மூன்றும் கலந்து கொள்ளும் வட்டமேஜை மாநாட்டின் பூர்வாங்கக் கூட்டம் பிப்ரவரி 6 ல் பிரிடோரியாவில் நடைபெற விருக்கிறது.

தென்னுப்பிரிக்காவின் சார்பில் மலான். மந்திரி டோங்கெஸ் [illegible] இதில் கலந்துகொள்வார் என்று தெரிகிறது.

ஐ. ந. வற்புறுத்தியது போல, வட்டமேஜை மாநாடாக இது இராதென்றும் அத்தகைய மாநாட்டிற்கு இது வழிகோலுவதாக இருக்கும் என்றும், அநேகமாக வட்டமேஜை மாநாட்டின் அஜெண்டா விஷயமாக இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாக்கெட்' ரேடியோ

லண்டன். டிச. 7—

பிரிட்டிஷார் கண்டுபிடித்துள்ள பாக்கெட் ரேடியோ விஷயத்தில் அமெரிக்கர்களும், கனடியர்களும் அபாரப்பிரியம் காட்டுகின்றனர். இந்த ரேடியோக்களுக்கு ஏராளமாக ஆர்டர்கள்வந்து குவிகின்றன

இந்த ரேடியோக்கள் சிகரெட் கேஸ்களை விட மிகச் சிறியதாக இருக்கிறதாம். இதில் நான்கு வால்வுகள் இருக்கின்றன. இதிலுள்ள விசேஷம் யார் இந்த ரேடியோக்களை வைத்திருக்கிருர்களோ அவர்களுக்கு மட்டும்தான் கேட்குமாம்.

அறிவுக் கதிர்!

பார்ப்பனர்கள் பின்பற்றி வந்த சடங்கு மலிந்த பல தெய்வ வணக்கத்தைக் கண்டிப்பதற்கு, திருவள்ளுவரையும் சிவவாக்கியரையும் ஒத்த பெரியார் தம் சொல் வன்மையையும் எழுதுமாற்றலையும் பயன்படுத்தி வந்தனர். திருக்குறள் ஓர் கல்விக் களஞ்சியம், நாவலர்க்குறுதுணை, ஒப்புயர்வற்ற சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல். திராவிடர்களின் மனப்போக்கு உயரொழுக்கத்தை நாடி நின்றது என்பது (அதனல்) தெற்றென விளங்கும். திருவள்ளுவர், சிவவாக்கியார் கபிலர், ஔவை இன்னும் இவர்போன்ற ஏனைய பண்டைத் திராவிடப் புலவர்களின் நூற்பாங்கை விளக்க வந்த பார்ப்பனர்கள் அவர்களெல்லாம் சமணர்கள் என வற்புறுத்திக் கூறுவாராயினர். இதற்கு எத்தகையச் சான்றுமே கிடையாது; ஆனலும், புத்த மதமும், சமண மதமும் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் உளப் போக்கையே உட்கொண்டிருந்தன வென்பதை எளிதில் ஐயுற முடியாது. நெருப்பினலும், போரினலும், இரக்கமற்ற கொடுமையினலும் பார்ப்பனர்கள் இந்தியாவில் புத்த மதம் பரவாதபடி அழித்தனர் சமயச் சழக்கைக் குறித்தவற்றை ஓர்ந்து, ஆய்ந்து ஒதுக்கியமையாலேயே திருவள்ளுவர் தம் நூலை எல்லாவற்றையும் அழித்து வந்த மிண்டிய இருட்ச சமய வாதப் பெருஞ்சுழியிலகப்படுத்தாது காப்பாற்றினர்.

—சார்லஸ் ஈ. கவர்.

ரயில்வேக்களுக்குத் தேவையான தனி பாகங்கள்

இனி இந்தியாவிலேயே தயாரிக்கப்படுமாம்

பம்பாய், டிச. 7—

இந்திய இரயில்வேக்களுக்குத் தேவையான தனி பாகங்கள், இந்தியாவிலேயே இனி தயாரிக்கப்படுமென்றும், இவ்விஷயமாக இந்தியா அயல் நாடுகளை நம்பியிருக்க வேண்டியதில்லை யென்றும், இதற்கான வசதிகளை செய்து தரவேண்டுமென்றும் ரயில்வே போர்டிடம் இந்தியஎன்ஜினிரியங் சங்கம் தெரிவித்திருக்கிறது.

இந்த சங்கத்தின் அதிகாரி ஒருவர், ருளோப் நிருபரிடம் கூறியதாவது:— என்ஜினிரியங் தொழிலை இதற்கு முன் ஆதரித்து உற்சாகப் படுத்தப்படவில்லை, ரயில்வேக்கள் டெண்டர்பில் வரவழைத்துவந்தனர். இதனல் பெரும் போட்டி ஏற்பட்டது. ஆகவே, ஒரு விசேஷ துறையில் இந்திய உற்பத்தியாளர்கள் சிரத்தைக் காட்டமுடியவில்லை. நியாய விலைக்கே பாகங்களை கிடைக்கும்படி செய்வதில் அயல் நாடுகளிலிருந்து இவைகளை இனி வாங்க வேண்டியதை நிறுத்திவிடலாம் என்றும் அவர் கூறினர்.

ஸ்டாலின் பிறந்த நாள் விழா

லண்டன் டிச. 7 —

வரப்போகும் பிறந்த நாளன்று ஸ்டாலினுக்கு இதாலியிலுள்ள கம்யூனிஸ்டுகளிடமிருந்து சில விசித்திரமான பொருள்கள் பரிசாக அனுப்பலாம் என்று தெரிகிறது. இரும்பு கலர் பூசப்பட்ட ஒரு லாரியின் [illegible] லேக் இரவு [illegible] பரிசாக அனுப்பப்படும் என்று தெரிகிறது.

திருச்சி மாவட்ட மாநாடு

வரவேற்புக் குழுக் கூட்டம்

திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டு, வரவேற்புக் குழுக் கூட்டம், 11-12-49 ஞாயிறு மாலை 4 மணிக்கு திருச்சி என். எஸ். [illegible] கூடும். அது [illegible] மாநாட்டுக்கமிட்டி தேர்ந்தெடுத்தல், மாநாட்டுத் தேதி [illegible] வரவேற்புக் குழுவினர் [illegible] அழைப்பு [illegible] வருக [illegible]

என். எஸ். [illegible]
ஜி. ராஜ [illegible],
செயலாளர்கள்.

குறிப்பு :—வரவேற்புக் குழுவினர்கள் தங்களின் கட்டணம் ரூ 5-ஐயும் என். சாம்பசிவம், பொருளாளர், என். எஸ், பங்களா தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

காந்தியார் விருப்பத்தைக் கண்ணியமாய் நிறைவேற்றுகிருர்களாம் !

“காங்கிரஸ் சாதனைகளைக் காண்மின்” என்ற எக்காளம்!

ஊழல்களுக்கு முலாம் பூசுகிருர் பட்டாபி சீதாராமையா !

நாட்டில் கட்டுக்கோப்பு ஏற்பட்டிருக்கிறது.

சமஸ்தானங்களை இணைத்து விட்டோம்.

மத அடிப்படையில் நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கிடையே இருந்துவந்த இயற்கைக்கு விரோதமான தடைகளை நீக்கிவிட்டோம்.

காந்திஜி விரும்பியவற்றை, நிறைவேற்றியிருக்கிறோம்.

சட்டம் இயற்றி, தீண்டாமையை ஒழித்திருக்கிறோம்.

நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

இந்து சட்ட தொகுப்புமூலம் பெண்களுக்கு விடுதலை அளிக்கப்போகிறோம்.

வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிப்பது மிகப் பெரிய ஜனநாயக உரிமையாகும்.

இவை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தோழர் பட்டாபி சீதாராமையா அவர்கள் தந்திருக்கும் பட்டியல். காங்கிரஸ் இவ்வளவு அரும்பெரும் பணிகளை நிறைவேற்றியிருக்கிறதாம். ஆகவே காங்கிரசைக் குறைகூறுவோர், காங்கிரஸ் சாதித்திருக்கும் இந்த அரும் சாதனைகளைக் கண்டு சாந்தி பெறவேண்டுமாம்!

பட்டாபியார் அகில இந்திய காங்கிரஸ் வரலாற்று நூலின் கர்த்தா அல்லவா? ஆகவே, காங்கிரசின் செல்வாக்கைக் காப்பாற்ற வேண்டியதும் அவரது கடமை என்ற முறையிலே, இவ்வளவு காங்கிரஸ் புகழ்பாட புறப்பட்டிருக்கிருர் போலும்.

தோழர் பட்டாபியார் தந்திருக்கும் பட்டியலை எடுத்து வைத்துக்கொண்டு, ஒவ்வொன்றாக அலசிப் பார்த்தால்தான் உண்மை தெரியும். காங்கிரஸ் சொன்னவை, காந்தியார் சொன்னவை, காங்கிரஸ் ஆட்சி செய்யக் கடமைப்பட்டுள்ள காரியங்கள் இன்ன பிறவற்றோடு, இதுகாறும் காங்கிரஸ் செய்திருக்கும் பணி, அதன் பலாபலன்கள் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்தாலல்லவோ தெரியும், பட்டாபியார் கூறுகிறபடி, காங்கிரஸ் செய்ததெல்லாம் அரிய சாதனைகளா அல்லவா என்பது?

“நாட்டில் கட்டுக்கோப்பு ஏற்பட்டிருக்கிறது” என்கிருர், இது எந்த அளவுக்கு உண்மை என்பதை அறியவேண்டுமாகுல், நாட்டைப்பார்க்கவேண்டிய அவசியமில்லை. சட்டசபை நிகழ்ச்சிகளைப் பார்த்தாலேபோதும். பள்ளிக் கூடங்களின் நிலைக்கும் அவற்றுக்கும் வித்தியாசம் காண முடியாது. மாணவர்களிடமாவது ஓரளவுக்கு ஒழுங்குமுறை காணப்படும். அதுகூட இல்லை, இந்த ஆளவந்தார் கூட்டத்தினை. சமஸ்தானங்களை இணைத்துவிட்ட ஒரே காரணத்தைக்

கட்டு காங்கிரஸ் கட்டுக் கோப்பை நிலைநிறுத்திவிட்டது என்பதற்கு என்ன ஆதாரம்?

“மாகாணங்கள் பல சுயாட்சி நடத்துவதாக எண்ணிக்கொண்டிருக்கின்றன. அதுவும் உத்தரவாதமில்லை. மாகாணங்களிடையே கட்டுக்கோப்பு இல்லை” என்று இந்திய முதலமைச்சர் பண்டித நேரு சொல்லி உள்ளத்தோடு பேசியிருப்பது ஒன்றே போதுமே, காங்கிரஸின் கட்டுக்கோப்பு எந்த அளவிலே இருக்கிறது என்பதை விளக்க!

அடுத்தபடியாக, “மத அடிப்படையிலிருந்த இயற்கைக்கு மாறுபட்ட தடைகளை விலக்கி விட்டோம்” என்று கூறுவது, எந்த அளவில் பயனுள்ள பேச்சு என்பதைப் பார்ப்போம்.

மத அடிப்படையில் விளையும் தீமைகள் அகற்றப்பட்டதாம்! இந்துமத ஸ்தாபனங்களுக்கு மாறுபட்ட ஸ்தாபனங்கள் இருக்கு மிடந்தெரியாமல் செய்ய, ரா. சு. சே. சங்கத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, அதனோடு காங்கிரஸ் கொஞ்சி விளையாடுகிறதே, இதுதானா மத அடிப்படையில் விளையும் தீமைகளைக் களைய காங்கிரஸ் மேற்கொண்ட அரும்பணி? இதுதான் இது ஒருபுறமிருக்கட்டும்; அடுத்த முக்கியமான பகுதிக்கு வருவோம்.

“காந்திஜி விரும்பியவற்றையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம்” என்கிருர், பட்டாபியாரின் இந்தப் பேச்சை ஆராய்ந்து பதில் சொல்லவேண்டிய அவசியம் நமக்கு வேண்டியதில்லை. பண்டித நேரு முதல்கொண்டு, பாமர காங்கிரஸ்காரர்கள் வரை “காந்திஜியின் கருத்துக்களை காங்கிரஸ்காரர்களும், பதவியிலுள்ளோரும் சிதைக்க ஆரம்பித்துவிட்டார்கள்” என்று அடிக்கடி ஓலமிடுவதை நாம் கண்டு வருகிறோம். இது எதை விளக்குகிறது, என்று பட்டாபியாரையே கேட்கிறோம். அது மட்டுமல்ல, காந்தியார் எந்த கள்ளமார்க்கெட்டுகளைக் கண்டித்தாரோ, அந்தக் கள்ள மார்க்கட் லஞ்சம்போன்ற ஊழல்கள் அனைத்தும் காங்கிரஸ் வட்டாரங்களில்தானே அதிகமாகக் காணப்படுகிறது! ஊழல்களின் உறைவிடம் காங்கிரஸ் என்ற நிலையன்றோ ஏற்பட்டுவிட்டது! பட்டாபியார் பகர்வதுபோல், காந்தியார் கருத்தை காங்கிரசார் நிறைவேற்றுவது உண்மையானுல் இத்தகைய நிலை ஏற்படுமா?

மேலும் “சட்டமியற்றி தீண்டாமையை ஒழித்திருக்கிறோம், நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது,” என்றெல்லாம் சொல்லுகிருர். இந்தத் தீண்டாமை ஒழிப்பு, வகுப்பு ஒற்றுமை இவற்றின் லட்சணத்தை நாடெங்கணும், அதிலும் தமிழ் நாடு மிகமிக நன்கு அறிந்திருக்கிறது. வகுப்புகள் இருக்க வேண்டியது அவசியமா என்பது பற்றியே எண்ணிப் பாராத காங்கிரஸ் ஆட்சியாளர், வகுப்பு ஒற்றுமை பற்றி பேசுவதில் ஏதேனும் அர்த்தமுண்டா? வகுப்புகளுக்கிடையே நீதி வழங்கும் தன்மை வாய்ந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ சட்டத்தை ஒழித்துக்கட்ட முனைந்துள்ள இந்த சீமான்கள் தாம், வகுப்பு ஒற்றுமைக்கு வழிகோலியுள்ளார்களாம்; என்னே விந்தை!

இங்ஙனமே பார்த்துக்கொண்டு போனுல், காங்கிரஸ் சாதனைகளின் லட்சணம் தெளிவாகப் புலனுகும்.

இந்து சட்டத் தொகுப்பு மசோதாமூலம், பெண்களுக்கு உரிமை வழங்கப் போகிறார்களாம். இது எந்த அளவு ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதை அண்மையில் டில்லியில் கூடிய அகில இந்திய மாதர் மாநாட்டாரைக் கேட்டால் நன்கு தெரியும். வைதீகர்களின் மிரட்டலுக்குப் பயந்து, காங்கிரஸ் அம்மசோதாவுக்கு உயிர் கொடுக்க மனமில்லாதிருக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் இம்மசோதாபற்றி காங்கிரஸ் அரசியலார் கொண்டிருக்கும் நோக்கத்தைக் கண்டிக்காதவர்களே இல்லையாது.

அடுத்துள்ளது, வயதுவந்தோருக்கு வாக்களிக்கும் உரிமை பற்றிய பேச்சு, வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்திருப்பது உண்மையே. ஆனுல், அது எந்த அளவு உருப்படியான பலன் தரக்கூடியது என்பதை அறியவேண்டுமானுல், வயதுவந்தோர் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டிருக்கும் முறையைப் பார்த்தாலே போதும்: அகில இந்தியாவிலும் 25 சதவிகித மக்களே இந்த வயது வந்தோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அதாவது, ஏறக்குறைய 8 கோடி மக்கள் என்று அறியப்படுகிறது இத்தகைய இரண்டுங்கெட்டான் முறையைத்தான் காங்கிரசின் ஜனநாயக முறை என்று வர்ணிக்கிருர். தோழர் பட்டாபி

இங்ஙனம் எதைஎடுத்தாலும் ஊழல் மயமாக வைத்துக்கொண்டு, நாட்டுமக்களை ஏமாற்றுவதுமல்லாமல், குறைகளை சுட்டிக்காட்டுவோர் மீதும் சீறி விழுகின்றனர் காங்கிரசார். ஊழல்களுக்கு அரியசாதனைகள் என்று முலாம் பூசுகிருர் பட்டாபி! என்னே விந்தை, நாட்டு மக்களை ஏமாளிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர் போலும் காங்கிரசார்! நடக்கட்டும்.

பாசியும் பசி தீர்க்கும்!

லண்டன், டிச. 7—

குளம் குட்டையிலுள்ள தண்ணீர் பாசிகளில் முக்ய கொழுப்பு சத்துக்கள், எண்ணெய்ச்சத்துகள் புரதசத்துக்கள் அடங்கி இருக்கின்றனவென்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாசிகளிலுள்ள நைட்ரோஜன் அளவை அதிகரித்தால் புரத சத்துக்களை இதில் அதிகமாகும்படி செய்யலாமாம்.

இந்த பாசிகளிலுள்ள சத்துக்களைக்கொண்டு, உணவுப்பொருளாக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அவசியமான மசோதா அலட்சியப்படுத்தப்படுகிறது!

:0:

‘பொதுமக்கள் ஆதரவு தரவில்லை’ என்ற பொருந்தாக் கூற்று!

;0:

விவசாய மசோதா கைவிடப்பட்ட அலங்கோலம்!

‘பொதுஜன அபிப்பிராயம் சாதகமாக இல்லாததால், சென்னை விவசாய மசோதாவை சட்டமாக்க சர்க்கார் முயற்சி செய்யப்போவதில்லை. இப்போதுள்ள நிலைமையில் மசோதாவை வெற்றிகரமாக நடத்துவது கஷ்டம் என்பதை சர்க்கார் உணர்ந்துள்ளனர்.”

இவை சென்னை விவசாய அமைச்சர் தோழர் ஆர். ஷெட்டி அவர்கள் அண்மையில் திருவாய் மலர்ந்தருளிய திருமொழிகள்!

“உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்; அதுதான் தற்போது நம்முள் உள்ள முக்கிய பிரச்னை; மற்ற விஷயங்களையெல்லாம் பின்னர் கவனிப்போம்; உணவு உற்பத்தித் திட்டத்தை முன்னிட்டு, மற்ற சில திட்டங்களைக் கூட சர்க்கார் கைவிட உத்தேசித்திருக்கிறது.”

என்றெல்லாம் பிரசாரம் செய்தனர் சென்னை அரசியலார். உற்பத்திப் பெருக்கத்துக்கென பொதுவிடங்களாகக் கருதப்படும் ‘பார்க்’குகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களைக்கூட பயன்படுத்தவேண்டும், என்று பேசியவர்கள் நமது சென்னை அரசியலார். அதாவது உற்பத்திப்பெருக்க விஷயத்தில் அவ்வளவு தீவிரவாதிகள்!

இத்தகைய தீவிரவாதிகள் தாம் இன்று ‘விவசாய மசோதா’ ஆகாத காரியம், அசாத்தியமானது என்றெல்லாம் பேசுகின்றனர்.

முதலில் அவசியத்தை உணர்த்திவிட்டு, அதற்கு ஆக்கமளிக்கும் மசோதாவொன்றைத் தீட்டி மக்களிடம் காட்டிவிட்டு இப்பொழுது, அது அசாத்தியமானது என்று பேசுகின்றனர். இப்படிப் பேசுவதுகூட ஆச்சரியமல்ல, அதற்கு அவர்கள் காட்டும் காரணம்தான் அதிவிசித்திரமானது!

மசோதாவுக்கு பொதுமக்கள் ஆதரவில்லையாம்! இதுதான் பொதுமக்கள் சர்க்கார் முக்கியமாகக் காட்டும் காரணம். எதை எடுத்தாலும் எதேச்சதிகார சட்டங்களின் துணை தேடும் புண்ணியர்கள், இதற்குமட்டும் ஏனோ பொதுமக்களை இழுத்தடிக்கின்றனர்! அப்படித்தான் பொதுமக்கள் அபிப்பிராயப்படி இவர்கள் எதைத் செய்து சாதித்திருக்கிருர்கள்?

இந்தி மொழியைக் கட்டாயமாக்கினார்களே, அது பொதுமக்கள் கருத்தறிந்து செய்யப்பட்ட செயலா?

அவசரச் சட்டங்கள் இயற்றினார்களே, அதற்குப் பொதுமக்கள் ஆதரவு வேண்டுமென்று கருதினார்களா?

இன்றும், இதே போன்று இவர்கள் மேற்கொண்ட காரியங்கள் அனைத்துக்கும், பொதுமக்கள் அபிப்பிராயம் தேடத்தான் அலைந்தார்களா?

அவற்றையெல்லாம் தம் விருப்பப்படி, தாம் இட்டதே சட்டம் என்ற முறையில் செய்துவிட்டு சாகுபடி செய்யும் நிலங்களை சர்க்காரே எடுத்து நடத்தும் ஒரு நல்ல மசோதாவுக்கு மாத்திரம் பொதுமக்கள் ஆதரவு கிடைக்கவில்லை யென்று பேசுவது ஏன்?

எதை வேண்டுமானுலும், எப்படி வேண்டுமானுலும் செய்து கொள்ளலாம் என்பதுதான் ஜனநாயக முறையா? மக்கள் விரும்பாத கூற்றுக்களை வலிய மக்களிடையே புகுத்துவது ஒரு புறம்; மக்கள் விரும்பும் கூற்றுக்களைப் புறக்கணிப்பது மற்றொரு புறம்! இதென்ன கேலிக்கூத்து!

முனிசிபல் கவுன்சில்கள் சீரமைப்பு

சென்னை மாகாணத்தில் முனிசிபல் கிராமம் சீரமைப்புக்கான திட்டங்களை ஆலோசிக்க, சர்க்காரால் நியமனம்பெற்றிருந்த ஆய்வுரைக்குழு, டிச. 6ந் தேதியன்று சர்க்கார் காரியாலயத்தில் தோழர் கே. எஸ். ரத்தினசபாபதி முதலியார் தலைமையில் கூடியது. முனிசிபல் சபைகளுக்கான தேர்தல்கள், வயது வந்தோர்க்கு வாக்குரிமை அடிப்படையில் நடைபெற வேண்டுமென சிபார்சு செய்வதென்று குழு முடிவு செய்தது. ஓரே உறுப்பினர் தொகுதிகளே இருக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு சபைக்குமான ஸ்தானங்களின் எண்ணிக்கை அக்காசபை பகுதிக்குட்பட்ட மக்கள் தொகையை யொட்டிக் கணக்கிடப்பெற வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாயும் தெரிகிறது. ஆதித்திராவிடர்களுக்குமட்டுமே மூன்று பருவங்களுக்கு—அதாவது, ஒன்பதாண்டுகளுக்கு—ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தல் (ரிசர்வ்) வரலாமென்றும், சிறுபான்மையோருக்கோ, பெண்களுக்கோ ஸ்தானங்கள் ஒதுக்க வேண்டியது அவசியமில்லை யென்றும் ஆய்வுரைக்குழு மேலும் சிபார்சுசெய்துள்ளதாம்.

பிரிட்டனில் சிகரெட் நெருக்கடி

லண்டன், டிச. 7—

பிரிட்டனில் பெண்கள் 40 ஆண்டுகளுக்கு முன்பு இரகசியமாக சிகரெட் பிடிக்க ஆரம்பித்தது போல். இப்பொழுது இரகசியமாக ‘பைப்’ உபயோகிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த பைப்கள் ஏராளமாக உபயோகிக்கப்படுகிறதென்பது, இவை ஏராளமாக விற்பனையாவதிலிருந்து தெரியவருகிறது.

பிரிட்டனில் சிகரெட் பஞ்சம் ஏற்பட்டிருப்பதே, பைப் அதிகமாக உபயோகிக்கப்படுவதின் காரணம் என்று தெரிகிறது.

பொன். கு. கோதண்டபாணி "அறிவாலயம்"

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

இராமனுதபுரம் (கோவை)

கோவை, நவ. 30—

இராமனுதபுரம் (கோவை) திராவிட முன்னேற்றக் கிளைக் கழகத்தின் துவக்க விழா 27-11-49 ஞாயிறு மாலை மிகச் சிறப்பாக நடந்தேறியது.

விழாவில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்த தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பி. பழனிச்சாமி, எஸ். அப்பாவு, என். இ. பாலகுரு ஆகியோர் 27-11-49 பகலில் சூலூரிலிருந்து பஸ் மூலமாக கோவை வந்து சேர்ந்தனர்.

கண்பகல் விருந்து, ஸ்டார் ஹோட்டலில், தோழர் கோபால் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாப்பாட்டிற்குப் பிறகு, எல்லோரும் கழகக் கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கழக செயலுறுப்பினர்கள் கூட்டம், காலையில் நடை பெறுததால், மாலை 3 மணிக்கு ஒத்தி போடப்பட்டிருந்தது கோவை நகர உட்கிளைகளைச் சேர்ந்த செயலுறுப்பினர்களும், நகரக் கழகச் செயலுறுப்பினர்களும், மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தோரும் கொண்ட தனிக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் சரியாக 3 மணிக்குத் துவக்கப்பட்டது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழக செயலுறுப்பினர்களைத்தவிர வேறு யாருங்கூட்டத்திலிருந்தால் அருள்கூர்ந்து வெளியேறி விடும்படியும், கூட்டத்தில் பேசப்படும் விஷயம் பத்திரிகைகளில் வெளியிடக் கூடியதல்ல வென்றும் கூறி, சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் கழகச் செயலுறுப்பினர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையைப் பற்றியும், கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையைப் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். நகரக் கழகச் செயலாளர் தோழர் இராசமாணிக்கம் நன்றி கூற இரகசியக்கூட்டம் இனிது முடிந்தது.

பின்னர், தோழர் இரா. நெடுஞ்செழியன் கோவை நகர மாணவர்களிடம் சிறிது நேரம் மாணவர் கழகம்பற்றி உரையாடல் நிகழ்த்திவிட்டு பொதுக்கூட்டத்திற்கு கிளம்பினார்கள்.

பொதுக்கூட்டம்

இராமனுதபுரம் (கோவை) கிளைக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டம், வழக்கமாகப் பொதுக்கூட்டங்கள் கூடும் மைதானத்தில் நடைபெற்றது. இழிகுணம் படைத்த சில காங்கிரஸ்காரர்கள் கூட்டம் நடைபெற வொட்டாமல் தடுக்க எவ்வளவோ முயன்று பார்த்தும், கழகத் தோழர்களின் சலியா உழைப்பின் காரணமாகவும், தடைபடா ஆர்வத்தின் காரணமாகவும் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன.

தோழர் அய்யாசாமி அவர்கள் முன்மொழிய, மற்றொரு தோழர் வழிமொழிய நகரசபை உறுப்பினர், தோழர் ஆர். கே. சடையப்பன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். கழகத் தோழர் ஒருவர் திராவிடநாட்டுப் பண் பாடினார்.

தலைவர் தம் முன்னுரைச் சொற்பொழிவு ஆற்றியவுடன் கொடியேற்றிவைக்குமாறு தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தோழர் பழனிச்சாமி அவர்கள், தி. மு. க. கொடியின் இலட்சியத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறி, இருவண்ணக்கொடியை ஏற்றுவித்தார்கள்.

அடுத்துத் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, கயமைக் குணம் கொண்ட சிலரின் தூண்டுதலின்பேரில், எலக்டிரிக்கார்பொரேஷனைச் சேர்ந்த சிப்பந்திகள் மின்சாரக் கம்பியை நறுக்கிவிட்டார்கள். காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டங்களுக்கு அனுமதித்த முனிஸிபாலிடியார் தி. மு. கழகக் கூட்டத்திற்கு அனுமதிக்காததைக் கண்டு பொதுமக்கள் பெரிதும் ஆத்திரமுற்றார்கள் எனினும், வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்வோம் என்று சொல்லியதன் பேரில் சமாதானம் அடைந்தார்கள். அதற்குள் மழையும் பெய்ய ஆரம்பித்த உடனே, கூடியிருந்தவர்கள் ஒதுங்குமிடம் தேட வேண்டியேற்பட்டது. அரை மணி நேரம் கழித்து மழையும் விட்டுவிடவே, கூட்டம் வேறு இடத்தில் துவக்கப்பட்டது.

தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து இன்றைய ஆளவந்தார்களின் யதேச்சதிகாரப் போக்கைக் கண்டித்துப் பேசினார்.

அடுத்துத் தோழர்கள் எம். ரத்தினம், எஸ். அப்பாவு ஆகியோர் அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்து, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. க. அழிக்க, காங்கிரஸ்காரர்கள் கையாளும் செயல்கள் பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் அய்யாசாமி அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. மழை பெய்தும்கூட சுமார் 6000-க்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். (வி-உ)

ஒரக்காட்பேட்டை

ஒரக்காட்பேட்டை, நவ. 29—

ஒரக்காட்பேட்டை இராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நேற்று மாலை சிறப்புற நடந்தேறியது. சுற்றுப்பக்க கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்து குழுமியிருந்தனர்.

"போர்வாள்" ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழகத்தைத் திறந்து வைத்துச் சொற்பெருக்காற்றினார்.

அடுத்து தோழர் எம். சின்னையா இன்றைய ஆட்சியாளரின் அலங்கோல ஆட்சியைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றி கூறவுடன் கூட்டம் இனிது முடிந்தது. (வி-வி)

மதுராந்தகம்

மதுராந்தகம், டிச. 1—

30-11-49 ல் தோழர் எம். சின்னையா அவர்கள் தலைமையில், தி. மு. க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன், காஞ்சி.மணிமொழியார், பத்மன்செல்லப்பன் ஆகியோர் பேசினார்கள்.

தலைவர் முடிவுரை கூறியவுடன், செயலாளர்யாவர்க்கும் நன்றி செரிவிக்கக் கூட்டம் சிறப்புற முடிந்தது. (வி-உ)

கணியூர்

கணியூர், டிச. 3—

2—12—49 மாலை இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் மிக்க ஆர்வத்தோடு நடந்தேறியது.

கூட்டம் மாலை 7 மணிக்குத் துவக்கப்பட்டது. உடுமலை நகரசபை உறுப்பினர், தோழர் மீனாட்சிசுந்தரம் அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ள, மற்றொரு தோழர் ஆதரிக்க, தோழர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் தலைமைவகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் உடுமலை நகரசபைத் தலைவர் கனகராஜ், பொ. அ. இராமானுசம், கே. ஏ. மதியழகன், இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு ஆகியோர் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்கள். சுமார் 3000-க்கு மேற்பட்ட மக்கள் வந்து கூடியிருந்தனர்.

தலைவர் முடிவுரைக்குப்பின், தோழர் அங்கமுத்து அவர்கள் நன்றிகூற, கூட்டம் இரவு 10-15 மணிக்கு இனிது முடிந்தது. (வி-உ)

இந்தியா-யு. எஸ். கலாசாரத் தொடர்பு மாநாடு

இந்தியா-அமெரிக்கா உத்தியோக பற்றற்ற கலாசார மாநாடு டிசம்பர் 12 முதல், பத்து நாட்களுக்கு புது டில்லியில் நடைபெறவிருக்கிறது. இந்திய கோஷ்டி, உலக விவகார இந்தியக் கௌன்ஸில் தலைவர் பண்டிட் ஹிருதயநாத்கின்ஸ் தலைமையில் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும்.

சென்னை-600 078.

நாடகத்தில் என். வி. என். பேச்சு

சென்னை டிச. 7—

சென்னை சவுந்தர்ய மகாலில், நேற்றிரவு வீர கட்டபொம்மன் என்னும் தமிழகச் சரித்திர சம்பந்தமான நாடகத்தை, மதுரை புகழ் எஸ். வி. கணேசன், மூத்தப்பா ஆகியோர் எட்டயபுர நாடகக் குழுவினரால் நடிக்கப்பட்டது.

தோழர் என். வி. நடராசன் தலைமை வகித்தார். தோழர் சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி முதலியோர்களும் வந்திருந்தனர்.

நாடக முடிவில், தோழர் என். வி. என். நாடகக் குழுவினரைப் பாராட்டிப் பேசுகையில், "எங்கள் நாட்டில் நாங்கள் உழைக்கிறோம், விதைக்கிறோம், உணவை உற்பத்திச் செய்கிறோம். ஆனால் அந்நியனாகிய வெள்ளையருக்கு நாங்கள் கப்பங்கட்ட வேண்டுமா" இது தமிழனின் தன்மானத்துக்கு இழுக்கு செய்வதாகும், என்று வெள்ளையன் ஆணவத்தை எதிர்நிலை நாம் அழிப்போம். இல்லையேல் போரில் மடிவோம்" என்று தன் மானமுடன் வாழ்ந்த தமிழகமும், மறத் தமிழர்களும் இன்று அதே நிலையில், வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு ஆண்டுதோறும் நம் சர்க்கார் மூலம் பல கோடிரூபாய்களை வரிப் பணமாக செலுத்துவது மானக்கேடாகும்" என்பதை இன்றைய நிலையில் தமிழகத்துக்கு இந்நாடகம் எடுத்துக்காட்டுகிறது.

இதுபோன்ற நம் நாட்டின் வீரத்தைக் காட்டும் சரித்திர சம்பந்தமான நாடகங்களுக்கே, இனி, நாட்டில் இடமிருக்க முடியும். அதனால் மக்களுக்கும் தன்மானத்தைப் போதிக்கமுடியும். என்றும், நாடகத்தில், பாதர் வெள்ளைத் தேவராகத் தோன்றி நடித்த எஸ். வி. பாண்டியன், மூத்தப்பா, ஜெயலட்சுமி, கமலம் மற்றும் நடிகர்களின் திறமையையும் பாராட்டிப் பேசினார்.

நடிகர்குழு செயலாளர் நன்றி கூறலுடன் இனிது நடை பெற்றது.

சேரிமக்கள் நலனுக்காக சகல வசதிகள் கொண்ட ஹால்

சென்னை, டிச. 7—

குவீன் மேரீஸ் கல்லூரிக்குப் பின் புறத்திலுள்ள சேரிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக, சகல வசதிகளும் கொண்ட ஒரு ஹாலை (மன்றத்தை) ஏற்படுத்த ரோடரி கிளப் கமிட்டி, திட்டம் போட்டிருக்கின்றது.

இப்பகுதிக்கு ரோடரிநகர் என்று பெயரிடப்படும். இதற்காக கிளப் ரூ. 4,000 அனுமதித்திருக்கிறது. இந்த ஹாலில் வைத்திய வசதி, படிக்க வசதி, குளிக்க வசதி முதலியவை செய்யப்பட்டிருக்கும். இந்த ஹாலில் ஒரு ரேடியோவையும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அடிக்கடி பிரசங்கங்கள் செய்யவும் இந்த ஹால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ரோடரி நகரின் தெருவை சுத்தமாக வைத்துக்கொள்ளுவதற்காக எந்தத் தெருவு சுத்தமாக இருக்கிறதோ அதற்குப் பரிசு அளிக்கவும் கமிட்டி உத்தேசித்திருக்கிறது. சேரிக் குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டு சாதனங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும். ஒய். எம். சி. ஏ. ஸ்தாபனத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு ஹரிஜனமாணவனுக்கு, ரூபாய் 225 உபகாரச் சம்பளம் கொடுக்க கமிட்டி நிர்ணயித்திருக்கிறது.

திருவத்திபுரம் 'பொங்கல் விழா' "கட்டுரைப் போட்டி"

வட ஆற்காடு மாவட்டம், திருவத்திபுரம் நகரத்தில் தைத் திங்கள் பொங்கல் நன்னாளைத் தொடர்ந்து நடைபெறும் "பொங்கல் விழாவில்" கட்டுரைப் போட்டி ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

நம் நாட்டில் இன்றைய முதன்மையான தொழில்கள் உழவும், நெசவும் ஆகும். இந்தத் தொழில்களின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் திட்டங்களைத் தீட்டித் தரக்கூடிய பொருளாதார மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் பயன் படுத்திக்கொள்வது, மாணவர்களுக்கு ஒரு ஊக்கத்தை அளிப்பது ஆகியவையே இப் போட்டியின் முக்கிய கருத்தாகும்.

கட்டுரைப் பொருள்:— நம் நாட்டின் தலையான தொழில்களான உழவு, நெசவு ஆகியவைகளை எவ்வகையில் வளர வழிசெய்தால், மாறுதல் செய்தால், நம் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தியுறச் செய்யலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டு உழவு, நெசவு பற்றி தனித் தனிக் கட்டுரைகள்.

திட்டங்கள் :—

1. உழவு, நெசவு — இந்தப் பொருள்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி மட்டுமே ஒரு மாணவர் எழுததல் வேண்டும்.
2. கட்டுரை எழுதும் மாணவர், சென்னை மாகாணத்தில் உள்ள ஏதாவதொரு கல்லூரியில் பயில்பவராக இருத்தல் வேண்டும்.
3. கட்டுரை, தாளின் ஒரே பக்கத்தில் எழுதல் வேண்டும். பக்கத்திற்கு 30 வரிக்கு மேற்படாமல் வெள்ளை அரைக் காகிதத்தில் 40 பக்கங்கட்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. கட்டுரை தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
5. கட்டணம் ஏதும் இல்லை. ஆனால் கல்லூரித் தலைவர் வழியனுப்ப வேண்டும்.
6. கட்டுரைவெளியீட்டுரிமைவிழாக் குழுவினருக்கே உரியது.
7. கட்டுரைகள் பொருள்நூல் அறிஞர்களைக்கொண்ட தேர்வுக் குழுவினரால் திருத்தப்பெற்று அறிவிக்கப்படும்.
8. கட்டுரைகள் 10—1—50-க்குள் "பொங்கல் விழாக் குழுவினர், திருவத்திபுரம் வ. ஆ." என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பரிசு விவரம் :—

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரை ஒவ்வொன்றிற்கும் முதல் பரிசு: ரூ. 25—0—0. இரண்டாம் பரிசு: ரூ. 15—0—0.

மற்ற விவரங்கள் வேண்டுவோர் (தபால் தலையுடன்) எழுதி தெரிந்துகொள்க என, பொங்கல் விழாக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

அமெரிக்கா நோக்கி தளபதி லீ

தலைமை வேஷம் பூண்டார் சியாங்!

சீனத் தேசிய சர்க்காரின் தலைமைப் பதவியை, தளபதி சியாங்கே-ஷேக் 5-ம் தேதி மீண்டும் ஏற்றுக்கொண்டார். அதே நேரத்தில் சர்க்கார் அதிகாரிகள் செங்டுவை விட்டு ஓட்டம்பிடித்துக்கொண்டிருந்தனர். ஆக்டிங் தலைவர் லீ, ஹாங்காங்கை விட்டு யு. எஸ்.ஸுக்குப் புறப்பட்டதும் சியாங் தலைமைப் பதவியை யேற்றார்.

டெல்அவீவ் துறைமுகம் விரிவாக்கப்படும்

அலெக்ஸாண்டிரியா, டிச. 7—

டெல்அவீவ் துறைமுகத்தை விஸ்தரிக்க, இஸ்ரேல் சர்க்கார் பெரும் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறினால், அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்துவிடலாம்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

10-12-49

சக்கரமல்லூர் :— சி. பி. சிற்றரசு

11-12-49

செய்யூர் :— என். வி. நடராசன், எம். சின்னையா.

தஞ்சாவூர் :— இரா. நெடுஞ்செழியன்.

கோவை :— க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

அறிவிப்பு

சில எதிர்பாராத காரணங்களால், தோழர் அண்ணாத்துரை அவர்கள் கலந்து கொள்ளுவதாக இருந்த

11—12—49 வாணியம்பாடி,
12—12—49 கிருஷ்ணகிரி,
13—12—49 தர்மபுரி,

ஆகிய தி. மு. க பொதுக் கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

போகிற போக்கில்...!

"வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்யாக்ரஹ ஞாபகார்த்தமாக அங்கு 16 அடி உயரத்தில் ஒரு ஸ்தூபி எழுப்பப்படும்."

—செய்தி

* * *

இந்த ஸ்தூபியை உப்பாலேயே எழுப்பினால் வெகு பொருத்தமாயிருக்குமென்கிறார் உணர்ச்சி வயப்பட்ட தீவிர தேச பக்தரொருவர்!

● ● ●

'அடுத்த வருஷத்தில் சென்னை மாகாணத்தில் உணவு நிலைமை நம்பிக்கை யூட்டுவதாக இல்லை. கஷ்டம் அதிகமாகத்தானிருக்கும்!

—விவசாய இலாகா அதிகாரி

* * *

பாதகமில்லை! கலங்காதீர்! இந்தக் கஷ்டங்களோடுதான் நாம் நன்றாய்ப் பழகியிருக்கிறோமே! இதுவரை கொடுத்து வந்த ரேஷனில் கல், மண், நெல் இத்தியாதிகளுக்கிடையே சிற்சில அரிசிமணிகளும் தென்பட்டு வந்தன; இனி வரும் கஷ்டங் காரணமாக வாராந்திர ரேஷனைச் களங்கப்படுத்தும். அந்த அரிசிகளும் இல்லாது போகலாம் அவ்வளவு தானே! வயிறு கேட்காவிட்டால், இருக்கவே இருக்கிறது மணிலாப்பிண்ணாக்கு! காஷ்மீர் பிரச்னை, டொமினியன் மாநாடு, உலக சமாதானம் இன்னபிறவற்றில் நம் தலைவர்கள் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது முந்திரிக்கொட்டை மாதிரி இந்தச் 'சாப்பாட்டுப் பிரச்னை'யைக்கிளப்பலாமா?

* * *

'சீனா ஜனாதிபதி பதவியை சியாங் மீண்டும் ஏற்றார்'

—செய்தி

பிரஜையில்லா நாட்டு மகாராஜாவாகிய அவரை, வேண்டாமென்று சொல்ல யார் இருக்கிறார்? தாராளமாய் ஏற்கட்டும்-ஓட்டம் பிடிக்கும் போதெல்லாம் கூட உத்தியோகபூர்வமாகவே ஓட்டம் பிடிக்கட்டும்!

"இந்திய சர்க்காரின் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக கல்வி இலாகா திட்டங்களுக்கான செலவு 25 சதவிகிதம் குறைக்கப்படுமென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்"

—கல்வி மந்திரி ஆசாத்

இதற்கேன் வருத்தப்பட வேண்டும்?—'நெருக்கடி நிலை' சரியான பிறகு எல்லோரும் படித்துக்கொண்டால் போகிறது! இடையில் அத்யாவசியமாகத் தோன்றில், 'சரஸ்வதி பூஜைக்கு இன்னும் ஒரு நாள் அதிகமாக விடுமுறை விட்டுவிட்டால் போகிறது!

● ● ●

"திருவண்ணாமலை தீப தரிசனம் : திருவிழாவுக்கு ஏராளமான ஜனங்கள் திரண்டு வந்தனர்; அண்ணாமலைக்கு அரோஹரா "என்றெல்லாம் பக்த கோஷம்."

—செய்தித்தலைப்பு

"பொது மக்களின் பலத்த கைத் தட்டலும் ஆரவாரமும்: திருவண்ணாமலை கண்டிராத பெருமைச்சி: நகரமெங்கும் இதே பேச்சு"—இவற்றையும் இரண்டு பத்தித் தலைப்பாக கொடுத்து சேர்த்துக்கொண்டிருக்கலாம்.

● ● ●

"நாட்டில் ஜவுளிப் பஞ்சம் இல்லை."

--தொழில் மந்திரி முகர்ஜி

பணப் பஞ்சம் வந்த பின்னும், ஜவுளிப் பஞ்ச அரக்கன் தரிக்க முடியுமா இந்நாட்டில்?

* * *

"கேடி ஜாபிதாவில் ஆஸப் அலி பெயர்!"

—செய்தித் தலைப்பு

'சுயராஜ்ய' கவர்னரானதில், கொஞ்சிற்றும் குற்றமில்லை.

● ● ●

"உழவர் நிலவுரிமைப் 'பாராட்டம் வளர்கிறது"

--செய்தித் தலைப்பு

பருவ மழை ஏமாற்றுவிடில் விரைவில் அறுவடையும் செய்து விடலாம்!

'பழைய ஜெருசல நிலைமை நீடித்தல் உலகுக்கே ஆபத்து'

'இஸ்ரேலுக்கு இந்தியா அங்கீகாரம் அரபுகளுக்கு நன்மையே'

கெய்ரோ, டிச. 7—

'இஸ்ரேல் அங்கீகார விஷயமாக என் சர்க்கார் இன்னும் முடிவான தீர்மானம் எதையும் செய்யவில்லை. இவ்விஷயம் கவனமாக ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் என்று பண்டித நேரு அமெரிக்காவில் கூறியிருக்கிறார். எது எப்படியானாலும் அரபுகளுடன் இந்தியாவின் நட்புக் கொள்கை முதல் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்' என்று எகிப்திலுள்ள இந்திய அரசப் பிரதிநிதி தோழர் ஏ. ஏ. டேவ்லி நேன்று நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- இந்தியா எப்பொழுதுமே அரபுகள் விஷயத்தில் நல்லுறவையே கொண்டிருக்கிறது. இனியும் இந்திய அரபுகளின் நண்பனாகவே இருந்து வரும்.

லெப்னானும் சிரியாவும் ஜார்டனிலும் இந்திய விடம் நல்லெண்ணம் இருப்பதை நான் நேரில் அறிந்துகொண்டேன். அப்துல்லாமன்னர் மிகவும் அன்புடனும் பிரியத்துடனும் என்னை நடத்தினார்.

பழைய ஜெருசலத்திலுள்ள நிலைமையை நான் நேரில் கண்டேன். இக்கஷ்டங்கள் சீக்கிரமே தாக்கப்படவேண்டும். இல்லையேல் மத்திய கிழக்குக்கு மட்டுமின்றி உலகத்திலேயே இத்தகை நிலைமை ஏற்படக்கூடும்.

அகதிகள் பிரச்னை என்றால் என்ன என்பது, எங்களுக்குத் தெரியும். இந்தியாவிலேயே அப்பிரச்னையை நாங்கள் சமாளித்துவருகிறோம். இப்பிரச்னை தீர்க்கப்படாவிடில் அரபு நாடுகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்.

இஸ்ரேலை இந்தியா அங்கீகரித்தால் அதனால் அரபுகளுக்கு நன்மையே ஏற்படும். அதனால் மத்திய கிழக்கு பிரச்னைகளை பரஸ்பர நல்லெண்ணத்துடன் தீர்க்க முடியும். அரபுகளின் நலன் ஒருநாளும் காற்றில் விடப்பட மாட்டாது.

சூழ்ச்சி பலிக்கவில்லை!

திருச்சேரை: டிச. 6—

அண்மையில் நடந்த ஜில்லா போர்டு எலெக்ஷனில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து நின்ற தோழர் என். எம். பி. குப்புசாமி பேரில் செல்வாக்குள்ள தஞ்சை ஜில்லா காங்கிரஸ்காரர்களின் மூலம் சிவின் பேரில் ஜோடனை செய்து காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டதற்காக துன்புறுத்தியதாகத் தொடர்ந்த வழக்கில் குற்றம் ருசுவாகவில்லை என்று கூறி நமது இயக்க ஆதரவாளரான தோழர் என். எம். பி. குப்புசாமி அவர்களை நேற்று வலங்கைமான் மேஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

கோயில் கட்டி, குளம் வெட்டுவதால் பயனென்ன பகர்வீர்!

—(0)—

வேலூரில் சென்னைப் பிரதமர்

—(0)—

சுவீகாரமெடுக்கும் முறையையும் சாடுகிறார்!

வேலூர் (சேலம்) டிச 6—

"நமது மக்களுக்கு எது தர்மம் என்பது தெரிவதில்லை. கோயில், குளம் கட்டுவதில் பிரயோஜனமில்லை. கல்விச் சாலைகள் நிறுவுவதுதான் சிறந்த தர்மம்.

பிள்ளை இல்லாதவர்கள் சுவீகாரம் எடுப்பது, சுத்தத் தவறு. நமது இந்து மதம் பிள்ளையில்லாதவர்களை அபாக்கியசாலி என்று கருதுகிறது. நான்சொல்லுகிறேன், பிள்ளையில்லாதவர்கள் தான் பாக்கியசாலிகள் என்று. ஏனெனில், பிள்ளையிருப்பவரின் அன்பு, தொண்டு, செல்வம் தன்குழந்தைக்கு மட்டும் பயனளிக்கின்றன. குழந்தையில்லாதவரின் அன்பு, தொண்டு, செல்வம் பலருக்குப் பிரயோஜனப்படுகின்றன. கந்தசாமிக் கவுண்டர் அவர்கள், தமது சொத்தைக் கல்விக்காக எழுதி வைத்துச் சென்றது, போற்றத் தகுந்தது" என்று நேற்று பிரதமர் தோழர் குமாரசாமி ராஜா அவர்கள், வேலூர் கந்தசாமிக் கவுண்டர் உயர்நிலைப் பள்ளி வெள்ளிவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். (க. நி)

அண்ணாமலையார் அருள்!

தெத்தேரி, டிச 7—

உடையார் பாளையம் தாலுகா, தெத்தேரி கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி கடர்வையார் என்பவருடைய மனைவி கார்த்திகைத் தீபத்தன்று, தம் வீட்டுத் தோட்டத்திலுள்ள குப்பைமேட்டில் அகல் விளக்கு ஏற்றிவைத்துவிட்டு உறங்கும் போது, எரிந்துகொண்டிருந்த திரியை ஒரு எலி இழுத்துச் சென்று வீட்டிற்கு அருகிலுள்ள வைக்கோல் போரில் வைத்துவிட்டது. இதன் விளைவாக கூரைக் கொட்டகை, இன்னும் பல மரச் சாமான்கள் உள்பட ரூ. 2000 வரை மதிப்புள்ள பொருள்கள் பஸ்பமாகி விட்டன.

இந்த கோரத்தில் மேற்படி வீட்டுக்குச் சொந்தக்காரர், திருவண்ணாமலை தீப உற்சவத்திற்குச் சென்றிருந்தாராம்.

"மலர்ச்சி"

தூத்துக்குடி, டிச. 5—

பல அசந்தர்ப்பங்களின் காரணமாக "மலர்ச்சி" 1—12—49 இதழ் வெளிவரவில்லை. மூன் அறிவிப்புக்குப்பின் இனி தொடர்ந்து வெளிவரும், என ஆசிரியர் அறிவிக்கிறார்.

ஏப்ரல் 1-ல் ஆந்திர மாகாணப் பிரிவினை!

ஜனவரி 26-ம் தேதிக்கு முன் ஆந்திர மாகாண அமைப்பு வேலையை கவனித்து முடிவு செய்வது இயலாத காரியம்.

எனினும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப் படும்."

என்று சென்னை அதிகாரிகள் முடிவு செய்திருக்கின்றனர். மந்திரி சபை அங்கத்தினிடமிருந்து வந்த கடிதத்தில் கண்டுள்ள விஷயங்களை ஆராய்ந்த பின் மேற்கண்ட முடிவை இந்திய அதிகாரிகளுக்கு அனுப்புவதாக முடிவு செய்துள்ளது சென்னை சர்க்கார்.

இனி நடப்பவை

கோவை—இவ்வூர் சர். பி. தியாகராயர் படிப்பகத்தின் முதலாவது ஆண்டுவிழா, 11-12-49 ஞாயிறு மாலை 9-மணிக்கு எடிசன் தியேட்டரில் நடைபெறும் தோழர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகிப்பார்கள். தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சியாங் சர்க்கார் சீனாவையே துறந்தோடுவது உறுதி!

எந்த நேரத்திலும் தயாராயிருக்கிறதாம் விமானம்

ஹாங்காங், டிச. 7—

சீன தேசீய சர்க்கார் பர்மாவிலிருந்து ஓட்டம் பிடிப்பது நிச்சயம் என்று தெரிய வருகிறது.

குன்மிங்கில் தலைநகரை ஏற்படுத்துவதாக இருந்த எண்ணத்தை சியாங்கேஷேக், கைவிட்டுவிட்டதாக நம்பப்படுகிறது.

செங்டுவுக்கு நாழிக்கு நாழி ஆபத்து அதிகரித்து வருகிறது. அனேகமாக செங்டுவையும் விட்டுவிட்டு சியாங் போர் மோஸாவுக்கே சென்று விடக்கூடும். விமானங்கள் இதற்காக எப்பொழுதும் தயாராகவே வைக்கப்பட்டிருக்கிறதாம். —ஏஜென்ஸி

காணவில்லை

என்னுடைய தம்பி பாலு என்பவர் இரண்டுமாத காலமாக எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை. ஓர் அவசர காரியத்திற்காக அவர் தேவைப்படுகிறார். எனவே அன்புகூர்ந்து அவர் எங்கிருந்தாலும் அவருக்கு வழிச் செலவுக்குப் பண உதவி செய்து உடனே என் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி நம் இயக்கத் தோழர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். அல்லது அவர் இருக்குமிடம் அறிந்து செய்தியனுப்பினால் உடனே நான் அதற்காவன செய்கிறேன். மேற்கண்ட உதவியை செய்து தரும் தோழர்களுக்கு என் நன்றி!

கே. சந்திரன்,
டெய்லர், முடக்கிபார்ரோடு,
இராஜபாளையம்.

விருது நகரில் "சந்திர மோகன்"

பொறுப்புக்குழு அமைப்பு

விருதுநகர், டிச. 4—

இன்று காலை 10 மணிக்கு தோழர் கே. எஸ். எஸ். அய்யாசாமி தலைமையில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 26-12-49 திங்கட்கிழமை இங்கு நடக்க இருக்கிற 'சந்திரமோகன்' நாடகத்தை நடத்த, கே. எஸ். எஸ். அய்யாசாமி, எஸ். உத்தண்டன், வ. பெ. வடிவேல், ஏ. கே. அருணாசலம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியவர்களைக் கொண்ட ஒரு பொறுப்புக் குழு அமைக்கப்பட்டது. நாடகத்திற்கு தோழர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனாரைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. விருது நகர் பெரியார் பெ. சி. சிதம்பரனார் மறைவுக்கு அனுதாப தீர்மானமும் நிறைவேறியது. (வி-உ)

மறுமணம்

பண்ணுருட்டி, டிச. 1—

30—11—49 புதன் காலை 9 மணிக்கு—தோழர்கள் கா. இராசவேல்-ராசவதி மறுமணம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பொது மக்களும் உள்ளூர் உறவினரும் குழுமி இருந்தனர்—முதற்கண்—புலவர் பக்கிரிசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைவரவர்கள் தமது முன்னுரையில், 'விதவா விவாகம்' நடைபெற வேண்டிய அவசியத்தையும், இளம் கைம் பெண்களின் துயரத்தையும் விளக்கிகூறி, மணமக்களை-மாலை மாற்றிக் கொள்ளச் செய்து வாழ்க்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றினார்கள். அடுத்துத் தோழர் குடந்தை என். கே. சாமி அவர்கள் பழமைக் கருத்துக்களையும், மூடநம்பிக்கைகளையும் எடுத்து விளக்கி, மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

பின்னர் சொற்பொழிவாற்றிய தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள், தமிழர்களின் பண்டைய வாழ்க்கை முறைகளையும், ஆரிய நாகரிகக் கலப்பால் ஏற்பட்ட இன்றைய நிலையையும் விளக்கி—பெண்ணுரிமையின் அவசியத்தையும், அதற்கு—இத்தகைய கைம் பெண் மறுமணத்தால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் கூறி, மணமக்களைப் பாராட்டி தமது உரையை முடித்தார்.

இறுதியில் பண்ணுருட்டி பஞ்சாயத்து போர்டு தலைவரான, காங்கிரஸ் இயக்கத் தலைவர் ஒருவரும் இவ்விதவா விவாகத்தை ஆதரித்துப் பேசி வாழ்த்துக் கூறினார்.

பல தோழர்கள் வாழ்த்திதழ்களும், பரிசுகளும்வழங்கினர். முடிவாகத் தலைவர் பாரதிதாசன் அவர்கள்—நாடு சீர்திருந்த வேண்டிய அவசியத்தை விளக்கி, விரிவாகப் பேசியபின் — 12-மணிக்கு நன்றி கூறலுடன் விழா மிகச் சிறப்பாக நிறைவேறியது.

அனுதாபம்

திருத்தங்கல், டிச. 7—

இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் மு. சோலையப்பன் அவர்கள் புதல்வன் "மூர்த்தி" (வயது 2) சில நாட்களாக நோயுற்றிருந்து 5-12-49-ல் இயற்கை எய்தியமைக் குறித்து திருத்தங்கல் தி. மு. கழகம் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

திராவிடர் நாட்குறிப்பு

வெளிவந்துவிட்டது

திராவிடர்டைரி—1950

திராவிடரனைவரும் பெற்றிருக்கவேண்டிய சிறந்த நாட்குறிப்பு திராவிட முன்னேற்றக் கழக முழு விவரங்கள் அடங்கியது

500 பக்கங்கள்-விலை அணு 12

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரண தபாலில் அனுப்ப ரூ 0—14—0ம் பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1-2-0ம் அனுப்பவேண்டும்.

இந்த நாட்குறிப்பில்

- அண்ணாவின் பொன் மொழிகள் நாளுக்கு ஒன்று வீதம் 365
- தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணா புகைப் படம்
- தி. மு. கழகக் கொடி—இரு நிறத்தில்
- தி. மு. கழகத் தோற்றமும், வளர்ச்சியும்—முழு விவரங்கள்
- தி. மு. கழக அமைப்பு முறை
- தலைமைக் கழகப் பொதுக் குழு. துணைக் குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்
- கழகப் பேச்சாளர் பெயரும், முகவரியும்
- தி. மு. கழகக் கிளைகள் 350-ன் விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும் — மாவட்டவாரியாக
- தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்
- திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள்
- அரசினர் விடுமுறை நாட்கள்
- தபால் தந்தி கட்டண விவரங்கள்
- ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள்
- விற்பனை வரி, வருமான வரி விவரங்கள் மற்றும் பல இன்றியமையாத குறிப்புகளும் அடங்கியுள்ளன.

இரண்டே நாட்களில் ஏராளமான பிரதிகளுக்கு ஆர்டர்கள் கிடைத்துவிட்டன. எஞ்சியிருப்பது சொற்ப பிரதிகளே

விற்பனையாளர்க்குக் கழிவு 20%

முன் பணமின்றி எவருக்கும் அனுப்பப்படமாட்டாது.

போர்வாள் அலுவலகம் பவழக்காரத் தெரு, சென்னை-1.

விருதைப் பெருந்தகையார் பெ. சி. சிதம்பரனார் மறைவுக்கு அனுதாபம்

கோவில்பட்டி

கோவில்பட்டி, டிச. 1—

விருதுநகர் பிரபல வியாபாரியும், வள்ளலுமாகிய பெருந்தகையார் பெ. சி. சிதம்பரனார் இயற்கை யெய்தியமை குறித்து 30-11-49 அன்று இவ்வூரில் ஒரு ஊர்வலமும் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. நகரில் எல்லா வியாபாரிகளும் கடையடைப்பு செய்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர். ஊர்வலம் மாலை 4-30 மணிக்கு ராமசாமி தியேட்டரில் வந்தடைந்த பின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெருவாரியான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு தோழர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து தலைமைவகித்தார். தோழர்கள் வி. ஏ. குருசாமி, எஸ். அருணாசலம் ஆகியோர் சிதம்பரனாரின் தொண்டு குறித்துப் பேசினர். தோழர் வள்ளிமுத்து அவர்களின் பேச்சுக்குப் பின் கூட்டத்தினர் அனைவரும் இரண்டு நிமிட நேரம் அமைதியுடன் எழுந்து நின்று மரியாதை செய்து, தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டனர். (ந-நி)

* * *

விருதுநகர்

விருதுநகர், டிச. 2—

இவ்வூர் ராவ்சாகிப் பெ. சி. சிதம்பர நாடார் இளைஞர் சங்கத்தின் சார்பில், பெ. சி. சிதம்பரனாரின் மறைவு குறித்து 1-12-49ல் தோழர் பொ. கருப்பையா தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஓர் அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (ஓ-நி)

* * *

கமுதி

கமுதி, டிச. 2—

இவ்வூர் நாடார் வித்தியா பிவிருத்தி சங்கத்தில் 1—12—49ல் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, விருதுநகர் கொடைவள்ளல் பெ. சி. சிதம்பரனார் இயற்கையெய்தியமை குறித்து அன்னாருக்கு மரியாதை செய்யும் பொருட்டு கூட்டத்தினர் அனைவரும் 3 நிமிஷ நேரம் அமைதியாக எழுந்து நின்றனர். பிறகு சிதம்பரனாரின் தொண்டுகளைக் குறித்துப் பாராட்டி, அன்னாரின் குடும்பத்திற்கு சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தீர்மான நிறைவேற்றம் மூலம் தெரிவிக்கப் பட்டது. (ஓ. நி.)

* * *

இராமநாயக்கன்பட்டி

இராமநாயக்கன்பட்டி, டிச. 1—

விருதுநகர் செந்திகுமார நாடார் கல்லூரித் தலைவரும், பலதரப்பட்ட பொது நல நிலையங்களின் நன்கொடையாளருமான பெ. சி. சிதம்பரனாரின் மறைவு குறித்து, இவ்வூர் நாடார் வாலிபர் சன்மார்க்க சாலையின் சார்பாக சங்கச் செயலாளர் தோழர் சி. அருணாசலம் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.

* * *

இராமநாயக்கன்பட்டி, டிச. 1—

விருதுநகர் பிரபல வியாபாரியும் அநேகக் கல்விக் கழகங்களின் கொடை வள்ளலுமாகிய இராவ்சாகிப் பெ. சி. சிதம்பரனார் 27—11—49-ல் இயற்கை யெய்தியமை குறித்து 29—11—49-ல் அருப்புக்கோட்டை தாலுகா இராமநாயக்கன்பட்டி உறவின் முறை நாடார்கள் க்ஷத்திரிய உயர்தர ஆரம்பப் பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. (ஓ-நி)

அரபு கிராமத்தின் மீது யூதர் தாக்குதல்

பெய்ரோ, டிச. 7

பாலஸ்தீன அரபு முக்கோணப் பகுதியில் ஜால்மேன் என்ற அரபுக் கிராமத்தின் மீது யூதர்கள் எக்காரணமுமின்றி தாக்கி மக்களைக் கொன்று சூறையாடியிருப்பதாக அம்மான் செய்தி ஒன்று கூறுகிறது. ஐநா காரியதரிசியிடமும் பாலஸ்தீன, சமரச கமிஷனிடமும் இவ்விஷயமாக ஜார்டன் சர்க்கார் புகார் செய்திருக்கிறது.

புதிய நூல்கள்

அண்ணாவின் அறைகூவல்	0—3—0
அறநிலையங்கள் (சி. என். ஏ)	0—6—0
பொருள்	0—4—0
நூல்நிலையங்கள்	0—3—0
மூலபலம் முறிகிறது	0—8—0
மனப்போக்கு மாறவேண்டும்	0—2—0
கம்பரும் வம்பரும் (இரா. நெ.)	0—4—0
விடியுமா?	1—0—0
புதிய பாதை	0—8—0
சங்கிலிச்சாமி (மு. க)	0—8—0
பலிபீடம் நோக்கி	0—6—0
அறப்போர்	0—3—0
கயிற்றில்தொங்கியகணபதி	0—3—0

விற்பனைக் கழிவு 25%. செலவு இனாம்.

முன்னேற்றப் பண்ணை, 2/122, பிராட்வே, சென்னை-1.

சந்தா விவரம்

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ.	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது

(வெளி நாடு)

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ.	3—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	9—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	18—0—0
ஒரு வருட சந்தா	ரூ.	36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது

மானேஜர், "மாலை மணி"

தங்கத் தாமரை

தில்லை-வில்லாளன் எழுதிய சிறந்த நாவல்

விலை ரூபாய் ஒன்று.

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

வானொலி

(9-12-49 வெள்ளிக்கிழமை)

சென்னை

[211.3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். மகாலட்சுமி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 ஏ. கே. சுப்பாராவ்—புல்லாங்குழல்

பிற்பகல்:

12-30 நகரத்தாப்பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு
2-45 குரல்வகை (இ. த.)

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 ரகுஜா ரஞ்சனி—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 கே. எஸ். சந்திரசேகரய்யர்-பாட்டு

இரவு:

7-00 டி. எஸ். நடராஜபிள்ளை—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வகை (இசைத்தட்டு)
8-00 ஒத்திகை நாடகம்
8-15 ஏ. எஸ். சந்திரசேகரய்யா-பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 டி. வி. இராமமூர்த்தி (ஆங்கிலப் பேச்சு)
9-30 நேயர் விருப்பம் (இ. த.)
10-30 முடிவு.

திருச்சி

[395.8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. சி. சுப்ரமணியம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 திருச்சி வாத்திய கோஷ்டி
8-30 டி. ஆர் ராணி—பாட்டு

பிற்பகல்:

12-30 நகரத்தாப்பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 டி. ஆர் ராணி—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 மதுரை ஷண்முகவடிவு—வீணை (இ. த.)
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 கே. சி. சுப்பிரமணியம்—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இ. த.)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வகை இசைத்தட்டு
7-45 டி. கே. தில்லை வேலு முதலியார்—பேச்சு
8-00 செம்பனார் கோவில் கந்தசாமி சகோதரர்கள்-நாகஸ்வரம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 நாட்டுப் பாடல்கள்
9-35 இசைவேலை (இ. த.)
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1